2. அறிவிப்புகள்

(அ) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் கூட்டப்படுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்றைக்கு (23–3–2020) 10–15 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு கூட்டப்பட்டுள்ளது. அதுகுறித்து எழுத்து மூலமான தகவலும் அனுப்பப்பட்டுள்ளது. குறைவான கால இடைவெளியில் இக்குழு கூட்டப்பட்டுள்ளதால், இதையே ஒரு தகவலாக எடுத்துக்கொண்டு, மாண்புமிகு குழு உறுப்பினர்கள் அனைவரும் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

1. வினாக்கள்—விடைகள்—*தொடர்ச்சி*

உடுக்குறியிட்ட வினாக்கள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

157—

உயரழுத்த மின்மாற்றி

***20173—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, நல்லூர் ஊராட்சி, ஆட்டந்தாங்கல் அம்பேத்கர் நகரில் உள்ள குறைவழுத்த மின்மாற்றியை உயரழுத்த மின்மாற்றியாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பகுதியில் போதிய அளவிற்கு மின்மாற்றிகள் இருக்கின்ற காரணத்தினால், புதிய மின்மாற்றிகள் அமைக்கின்ற அவசியம் எழவில்லை என்பதை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றி நல்லாட்சி நடத்தி, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் இருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, அவர்களுடைய வழியிலே தொடர்ந்து மின் மிகை மாநிலமாக மாற்றி நல்லாட்சி நடத்திவருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். என்னுடைய பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்கு மின் வாரியக் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தைத் தந்த மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பொங்கலூர் ஒன்றியம், வடமலைபாளையம் ஊராட்சி, புத்தரச்சல் கிராமத்தில் 110/11 கே.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 110/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு கேட்கின்றார். அந்தப் பகுதியில் மின்னழுத்தம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை ஆய்வு செய்து, தேவை இருப்பின், அதுகுறித்து மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

[2020 மார்ச் 23

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். காவேரி டெல்டா பகுதிகளைக் காத்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சீர்காழி தொகுதி, urban பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்குரிய உத்தரவுகளை மின்சாரத் துறைமூலம் வழங்கி, அதற்கான நிலம் கையகப்படுத்துவதில், ஊரக வளர்ச்சித் துறைக்குச் சொந்தமான நிலம் வழங்கப்பட்டு, அதற்கு துறையின்மூலம் அனுமதி கொடுக்காமல் ஏறத்தாழ ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருக்கிறது. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் அதை விரைந்து முடித்து, எங்களுடைய நகரப் பகுதியில் உள்ள குறைந்த மின்னழுத்த நிலையைப் போக்கிட, அந்தத் துணை மின் நிலையத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, டெல்டா மாவட்டங்களில் மின்னழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அந்த வகையில், அந்தப் பகுதியில் இருக்கின்ற இடங்களைக் கண்டறியும்போது, அதற்கான இடம் கிடைப்பது அரிதாக இருக்கின்ற காரணங்களினால்தான் இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊரக வளர்ச்சித் துறைக்குச் சொந்தமான இடம் இருப்பதாகக் கூறியிருக்கின்றார்கள். அதைத் துறையின் வாயிலாக ஆய்வு செய்து, போதுமான இடம் இருப்பின், அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். இல்லையென்றாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வேறு தனியார் இடத்தைத் தேர்வு செய்து, அந்த இடத்தை மின்சார வாரியத்திற்குக் கொடுப்பார்களேயானால், தமிழ்நாடு மின்சார வாரியம் அந்த இடத்தை விலைக்கு வாங்கி, அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.

திருமதி பொன். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்கும் திசைநோக்கி வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். நாமக்கல் மாவட்டத்தை நல்வழியில் நடத்திச் செல்லும் எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருச்செங்கோடு ஒன்றியப் பகுதியிலுள்ள புதுப்புளியம்பட்டி மற்றும் சித்தாளந்தூர் ஆகிய 2 ஊராட்சிகளின் மின்பிரிவு அலுவலகம் சித்தாளந்தூரில் அமைந்துள்ளது. உதவி செயற்பொறியாளர் அலுவலகம் 10 கி.மீ. தொலைவிலுள்ள நல்லூரிலும், கோட்டப் பொறியாளர் அலுவலகம் 35 கி.மீ. தொலைவிலுள்ள பரமத்தி–வேலூரிலும் அமைந்துள்ளது. ஆகவே, தற்போது சித்தாளந்தூர் மின்பிரிவு அலுவலகத்திலிருந்து புதுப்புளியம்பட்டி மற்றும் சித்தாளந்தூர் ஆகிய இரு ஊராட்சிகளின் மின் இணைப்புகளை திருச்செங்கோடு ஊரகப் பிரிவு மின் அலுவலகத்திற்கு மாற்றிக் கொடுத்து, 6 கி.மீ. தொலைவிலுள்ள திருச்செங்கோடு உதவி செயற்பொறியாளர் மற்றும் கோட்டப் பொறியாளரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதுடன், சித்தாளந்தூர், புதுப்புளியம்பட்டி ஆகிய இரண்டு ஊராட்சிகளுக்கும் திருச்செங்கோடு துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கி, இங்குள்ள விசைத்தறிக் கூடங்கள், தொழிற்சாலைகள் மற்றும் விவசாயப் பணிகள் சிரமமின்றி நடைபெற உதவுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையில் குறிப்பிட்ட பகுதி சரியான பகுதிதான். அந்தக் கோரிக்கை குறித்து, ஏற்கெனவே, அதிகாரிகளோடு ஆய்வு செய்து, அந்தப் பகுதியை திருச்செங்கோடு மின் நிலையத்தோடு இணைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றோம். அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.

திரு. அ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலன்சார்ந்து கேட்டதையெல்லாம் அள்ளித் தரக்கூடிய நம்முடைய அரசு, தமிழகத்திலிருக்கக்கூடிய ஏழை எளிய விவசாயிகள் அனைவருக்கும் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்குவதற்கு பரிசீலிக்குமா என்பதைக் கேட்டறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்டங்களில் 12 மணி நேரமும், மற்ற பகுதிகளில் 9 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. காற்றாலை மின்சாரம் மற்றும் சூரிய மின்சக்தி ஆகியவை அதிகமாகக் கிடைக்கின்றபோது, 20 மணி நேரத்திற்கும் மேலாகக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில் 9 மணி நேரம் தடையில்லாமல் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே அது தொழிற்சாலையோடு இணைந்த பகுதியாக இருந்தால், 24 மணி நேரமும் மின்சாரம் கொடுக்கப்படுகின்ற பகுதியாகத்தான் இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

2020 மார்ச் 23]

ஏற்கெனவே சரியாக 9 மணி நேரம் மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியை ஆய்வு செய்து, அவரது கோரிக்கை கொள்கை முடிவிற்குட்பட்டது என்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

158—

இணைப்புச் சாலை

***8605—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, இளந்தோப்பு ஊராட்சி, திருக்குறகாவல் காலனி தெருவிலிருந்து சோழியங்கோட்டகம் சாலை வரை இணைப்புச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, இளந்தோப்பு ஊராட்சியில், திருக்குறகாவல் காலனி முதல் சோழியங்கோட்டகம் சாலை வரையிலான இணைப்புச் சாலை, நடப்பு நிதியாண்டில் தார்ச் சாலையாக மாற்றியமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.